


நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நேற்று (07.10.2024) தலைமைச் செயலகத்தில் நீர்வளத் துறையின் அனைத்து மண்டல பொறியாளர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நீர்வளத் துறை கூடுதல் செயலாளர் திருமதி சு.மலர்விழி, நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சா.மன்மதன், நீர்வளத்துறை சிறப்பு செயலாளர் சு.ஸ்ரீதரன் மற்றும் அனைத்து மண்டல பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று (7.30.2024) ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமியிடம் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு சென்னை பெருநகர் பகுதியில் உள்ள ஊராட்சிகளில் தெருக்கள் மற்றும் சாலைகளை மேம்படுத்துவதற்காக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு ரூபாய் 66 கோடிக்கான காசோலையினை ஊரக வளர்ச்சித் துறைக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், மற்றும் தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ். ருத்ரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.



தி.மு.கழக பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கொளத்தூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் புகழரங்கத்தில் உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., நடிகர் பொன்வண்ணன், முனைவர் பர்வின்சுல்தானா, கவிஞர் தனிக்கொடி ஆகியோர் புகழுரைத்தனர். உடன் மேயர் பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ப.ரங்கநாதன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### சென்னையில் நடந்த விமானப்படையின் வான்வழி சாகச நிகழ்ச்சியைக் காணவந்து உயிரிழந்த

# 5 நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, அக். 8-

**சென்னையில் நடந்த விமானப்படையின் வான்வழி சாகச நிகழ்ச்சியைக் காண வந்து உயிரிழந்த 5 நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று அவரது அறிக்கை வருமாறு:-

நேற்று (06.10.2024) சென்னையில் இந்திய விமானப்படையினரால் சாகச நிகழ்ச்சி சென்னை மெரினா கடற்கரையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சிக்குத் தேவையான நிருவாகரீதியிலான ஒத்துழைப்பையும், வசதிகளையும் செய்து கொடுப்பதற்காக இந்திய விமானப்படை கோரியிருந்ததற்கு மேலாகவே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதற்கென தமிழ்நாடு அரசின் காவல்துறை, தீயணைப்புத்துறை, சென்னை பெருநகர மாநகராட்சி, மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை ஆகிய முக்கியத் துறைகள் ஒருங்கிணைந்து சிறந்ததொரு நிகழ்ச்சியை சென்னை மக்களுக்கு வழங்குவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதனால் கூட்ட நெரிசல் ஏற்படுவது தவிர்க்கப்பட்டது. இருப்பினும் எதிர்பார்த்த எண்ணிக்கையை விட மிகமிக அதிக அளவில் மக்கள் வந்திருந்ததால், நிகழ்ச்சி முடிந்த பின்னர் திரும்பச் செல்லும்போது மக்கள் தங்கள் வாகனங்களை அடைவதிலும், பொதுப்போக்குவரத்தைப் பெறுவதிலும் மிகுந்த சிரமம் அடைந்தனர் என்பதை அறிந்தேன். அடுத்தமுறை இதுபோன்ற பெரிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் போது இவற்றில் கூடுதல் கவனமும் ஏற்பாடுகளும் செய்யப்படும்.

இந்நிகழ்வில், கடும் வெயில் மற்றும் பல்வேறு மருத்துவக் காரணங்களால் ஐந்து விலைமதிப்பற்ற உயிரிழப்புகள் ஏற்பட்டன என்பதை அறிந்து மிகுந்த மன வேதனையும், வருத்தமும் அடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களுக்கு இத்தருணத்தில் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டம்! 65 சதவிகித நிதியைத் தருவதாக

# ஒன்றிய அரசு கூறியது தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற நடத்தப்பட்ட நாடகம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 8-

இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்திற்கு 65 சதவீத நிதியை தருவதாக ஒன்றிய அரசு பீற்றிக் கொண்டது தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற நடத்தப்பட்ட நாடகம் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டித்துள்ளது.

இதுகுறித்து 7.10.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது.



தினகரன்

அக்டோபர் 7, 2024 திங்கட்கிழமை

ஒன்றியத்தின் நாடகம்

சென்னை மாநகரை பொருத்தவரை மெட்ரோ ரயில்களின் சேவை சிறப்பானது. குறித்த நேரத்தில் போக்குவரத்து நெருக்கடி இன்றி செல்வதில் மெட்ரோ ரயில்களுக்கு முக்கிய பங்குண்டு. இந்நிலையில் 116.1 கிமீ தூரத்தில், 124 ரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் தற்போது மெட்ரோ 2ம் கட்ட பணிகள் நடந்து வருகின்றன. இதற்கான பட்ஜெட் 63,246 கோடி. வரும் 2028ம் ஆண்டுக்குள் சென்னை இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்தை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ள நிலையில், திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு பெரும் பிரச்னையாக உள்ளது.

மாதவரம் முதல் சிப்காட் 2, லைட் ஹவுஸ் முதல் பூந்தமல்லி, மாதவரம் முதல் பூந்தமல்லி என மூன்று வழித்தடங்களை உள்ளடக்கி மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்ட பணிகள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன. கடந்த 2020ம் ஆண்டே இதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட நிலையில், ஒன்றிய அரசு தனது பங்கு நிதியாக ஒரு பைசா கூட...

சென்னை மாநகரை பொருத்தவரை மெட்ரோ ரயில்களின் சேவை சிறப்பானது. குறித்த நேரத்தில் போக்குவரத்து நெருக்கடி இன்றி செல்வதில் மெட்ரோ ரயில்களுக்கு முக்கிய பங்குண்டு. இந்நிலையில் 116.1 கிமீ தூரத்தில், 124 ரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் தற்போது மெட்ரோ 2ம் கட்ட பணிகள் நடந்து வருகின்றன. இதற்கான பட்ஜெட் 63,246 கோடி. வரும் 2028ம் ஆண்டுக்குள் சென்னை இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்தை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ள நிலையில், திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு பெரும் பிரச்சினையாக உள்ளது.

மாதவரம் முதல் சிப்காட் 2, லைட் ஹவுஸ் முதல் பூந்தமல்லி, மாதவரம் முதல் பூந்தமல்லி என மூன்று வழித்தடங்களை உள்ளடக்கி மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்ட பணிகள் ஏற்கனவே நடை பெற்று வருகின்றன. கடந்த 2020ம் ஆண்டே இதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட நிலையில், ஒன்றிய அரசு தனது பங்கு நிதியாக ஒரு பைசா கூட வழங்காதது சிக்கலை ஏற்படுத்தியது. ஒன்றிய அரசு தனது பங்கை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. ஆனால் அது தமிழக அரசின் திட்டம் என ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வழக்கம் போல் தட்டி கழித்து வந்தார்.

இந்நிலையில் கடந்த 29ம் தேதி டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்துக்கான நிதியை ஒதுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். இதைதொடர்ந்து கடந்த 4ம் தேதி டெல்லியில் நடைபெற்ற ஒன்றிய அமைச்சரவைக்கூட்டத்தில், சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனால், ஒன்றிய அரசு விரைவில் நிதிஉதவி வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு தொகையான ரூ.63 ஆயிரத்து 246 கோடியையும் தாங்களே தருவது போல் ஒன்றிய அரசின் அறிவிப்பும் வெளிவர, அதை பாஜவினர் சமூகவலைதளங்களில் பரப்பினர். ஆனால், ஒன்றிய அரசின் பங்கு வெறும் ரூ.7,425 கோடி என்ற உண்மையும் வெளியானது. தங்களது பொய் இவ்வளவு சீக்கிரம் அம்பலமாகும் என்று பா.ஜ.வினர் எதிர்பார்க்கவில்லை. இந்த நிலையில்தான் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிய கதையாக, ஒன்றிய அரசு தற்போது புதியதொரு விளக்கத்தை அளித்துள்ளது. இதில் மெட்ரோ பணிகளுக்கான மதிப்பீட்டு செலவில் ஒன்றிய அரசு 65 சதவீதத்தை வழங்குவதாகவும், இதில் ரூ.32 ஆயிரத்து 548 கோடியை ஒன்றிய அரசு பன்னாட்டு நிறுவனங்களிடம் கடனாக பெற்று வழங்கும் என கூறப்பட்டுள்ளது. அதாவது பன்னாட்டு முகமைகளிடம் பெறப்படும் கடன்கள் மாநில அரசுக்கானதாக இல்லாமல், ஒன்றிய அரசுக்கானதாக கருதப்படும்.

இக்கடனை திருப்பி செலுத்தும் பொறுப்பானது சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ்நாடு அரசை சார்ந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் ரூ.7425 கோடி மட்டுமே ஒன்றிய அரசின் பங்களிப்பாக உள்ளது. மற்ற தொகை எல்லாம் கடன்தான். இதுவரை தமிழ்நாடு அரசு பன்னாட்டு முகமைகளிடம் இருந்து கடனை வாங்கி மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு தந்தது. ஆனால், இனிமேல் ஒன்றிய அரசு கடனை வாங்கி தரும்.

அதாவது கடனை வாங்கித்தரும் ஏஜென்டாகவே. ஒன்றிய அரசு செயல்பட உள்ளது. எப்படி பார்த்தாலும் கடனை திருப்பி செலுத்தும் பொறுப்பு தமிழ்நாடு அரசுக்குதான். நிலைமை இவ்வாறு இருக்க 65 சதவீத நிதியை தாங்கள் தருவதாக ஒன்றிய அரசு பீற்றிக் கொண்டது விந்தை. இது தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற அரங்கேற்றப்பட்ட நாடகம். இதலெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் ஏமாற மாட்டார்க என்பதை ஒன்றிய ஆட்சியாளர்கள் எப்போதுதான் உணருவார்களோ?

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் ஐ.சி.எஃப்.வ.முரளிதரன் தலைமையில்

# கொளத்தூரில் பவளவிழா - முப்பெரும் விழா மாபெரும் புகழரங்கம்!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. – நடிகர் பொன்வண்ணன் – பர்வின் சுல்தானா சிறப்புரை!

சென்னை, அக். 8-

தி.மு.கழக பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கொளத்தூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஐ.சி. எப்.வ.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் புகழரங்கத்தில் உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., நடிகர் பொன்வண்ணன், முனைவர் பர்வின்சுல்தானா, ஆகியோர் புகழு ரைத்தனர்.

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவின், திராவிடத் தொடர்13வது நிகழ்ச்சியாக “பேராளிகள் தந்த திராவிடம்! இனமானம் காக்க போரிடும்!என்ற தலைப்பில் மாபெரும் புகழரங்கம் நேற்று (7.10.2024 ) திருவள்ளுவர் திருமண மாளிகையில் மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகித்து பேசினார்.

கொளத்தூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஐ.சி.எப்.வ. முரளிதரன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் புகழரங்கத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., நடிகர். பொன்வண்ணன், முனைவர் பர்வின்சுல்தானா ஆகியோர் புகழுரைத்த விழாவை கவிஞர் தனிக்கொடி தொகுத்து வழங்கினார்.

மேலும் இப்புழகரங்கத்தில் மேயர் பிரியாராஜன், கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், கவிஞர் காசி முத்து மாணிக்கம், கோ.ஏகப்பன். கொளத்தூர் தொகுதி பொறுப்பாளர் இரா.விடுதலை, எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதாமகேஷ் குமார் எம்.சி, தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர். எஸ்.சித்திக், ம.அசோக்குமார், கொளத்தூர் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: பி.பழனி, இளா.இளங்கோவன், எஸ். கே.ரமேஷ், எம்.தாவூத்பீ எம்.சி, எல்.டி.தாமஸ். கொளத்தூர் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: பி.டி.சி.ரவி, பி. பொன்முடி, பி.ஊமைதுரை, கே.ஜார்ஜ்குமார், ப.அன்பரசு, டி.சந்திரசேகர். மாமன்ற உறுப்பினர்கள்: யோகபிரியா தனசேகர். பி.அமுதா பொன்னிவளவன், சி.ஸ்ரீதணி, கே.சாரதா. மாவட்ட பிரதிநிதிகள் எஸ். டி.பாஸ்கர், க.விஜயரங்கம், எஸ்.முரளி, கே.சந்தானம், எம். துளசி, எஸ்.பி. சதீஷ்பாபு, பி.வெங்கடேசன், ஜி.செல்வம், ஜி. பொன்னிவளவன், சி.சந்திரசேகர், புரசை ஜி.ராமகிருஷ்ணன், பொன்புகழேந்தி.

இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர். காஞ்சனா, பி.சூரி.

எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி, என்.ராமச்சந்திரன், எம்.டி. தமிழ்செல்வன், செ.முரு கன், என்.சௌந்தர்ராஜன், என். பவுல்ராஜ். ஆர்.ஆரோக்கிய தாஸ், எம்.நாகராஜ், அ.கன்னியப்பன், டி.எ.ராஜன், ஆர். மோகனசுந்தரம், எஸ்.சம்பத்குமார், ஜெ.சரவணன், என்.ரவி சந்திரன், ஆர்.சொக்கலிங்கம், எஸ்.நாகராஜன், ஏ.எம்.ராஜசேகர், ஆர்.ஜெ. வெங்கடரமணமூர்த்தி. எம்.சத்யா, துரை வெங்கடேசன், ஆ.சு. அசோக்குமார், கே.எஸ்.சபரி நாத், வி.அருண்ராஜன், சொ. பழனி, எஸ்.சின்னராஜா, சட்டர் க.ஜெயபால், பி.பாஸ்கர், எஸ்.துளசிகுருபரன், எஸ்.மணி வண்ணன், எஸ்.சுகுமார், எஸ். தினேஷ், வி.ஜெ.கஜேந்திரன், எஸ்.ஸ்ரீநாத், வெற்றிநகர் இ. சிவா, எஸ்.மதன், சி.வி.யோகராஜ், என்.வேலன், எ.முகம மது இஸ்மாயில், ஜி.லட்சுமணன், டி.சரவணன், ஜி.எஸ். பிரகாஷ், டி.ரமேஷ், எ.சதீஷ்குமார், எஸ்.டி.சீனிவாசன், பெ.குருநாதன், பிரவீன் சேட், மகாராஜன், என்.வேலன், சு. கி.ராஜ், கே.சதீஷ்பாலு, எம். துரை, அருண்மனோகர், பி. சுரேஷ், கே.கங்காதரன், கௌரிகுருபரன், வி.பிரபாவதி, எஸ்.விஜயலட்சுமி, பெரியார் பிரியா, டி.தமிழ்செல்வி, யமுனாதேவி, த.ஹேமலதா, பி. முனுசாமி, உதயகுமார், ஜெகதீஷ், பிளம்பர் ஆறுமுகம், மல்லிபூநகர் சிவா மற்றும் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

### எழும்பூர் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி

# 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

சென்னை, அக்.8-

எழும்பூர் தொகுதி, மண்டலம் 8, வார்டு எண்.108, ஷெனாய் நகர், சுப்பராயன் தெருவில், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், 1.25 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடத்திற்கு கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் காந்தி, கமலக்கண்ணன், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல், 108ஆவது வட்ட துணைச் செயலாளர்கள் கே.சீனிவாசன் மற்றும் ஜெ.இந்திராகாந்தி, எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்ப ரசன், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் சி.முத்து லெட்சுமி, எழும்பூர் தெற்குப் பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் அ.குருமூர்த்தி, 108 ‘அ’ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 108வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் த. மணிகண்டன் மற்றும் ஜோ.சந்தோஷ்குமார், ராஜலெட்சுமி கோலப்பா, வட்டச் செயற்குழு உறுப்பினர்கள் பி.பிரவீண், பா.ஆனந்த் மற்றும் வீ.பாபு, பாக முகவர்கள் ஜி.பிரவீண், செந்தில் மற்றும் புஷ்பராஜ், அசினா பேகம், பா.ரேகா, சாந்தி, ஆர். வேலு உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.



சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் கோவிலம்பாக்கம் ஊராட்சி ரோஸ் நகர் பகுதியில் 1.80 கோடி ரூபாய் மதிப்பில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியை சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த்ரமேஷ் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் ஜி.வெங்கடேசன், மாவட்ட பிரதி ஆர்.சொக்கலிங்கம், ஒன்றிய குழு துணை தலைவர் பி.பிரசாத்,மாவட்ட குழு உறுப்பினர் என்.வேதகிரி, ஒன்றிய குழு உறுப்பினர் எஸ்.பன்னீர்செல்வம், ஊராட்சி மன்ற தலைவர் கீதா மணிமாறன் துணைத் தலைவர் சி.மணிமாறன் வார்டு உறுப்பினர்கள் சுஜிதா சத்யா, சுமதி குமார், மஞ்சுளாராஜேஷ், விஜயகுமார், ரேகாசெல்வராஜ், சற்குணம், விஸ்வநாதன், குமார் மற்றும் கழக நிர்வாகிகள் ஜெகநாதன், சீனிவாசன், முத்து, சந்திரசேகர், ராஜி, சுதாகர், பழனி, துலுக்கானம், அய்யனார், ராமச்சந்திரன், சக்கரவர்த்தி, அறிவழகன், பெருமாள், அல்லி முத்து, குமார், பாலகிருஷ்ணன், பூபாலன், கதிர்வேல், ராஜமாணிக்கம், இளங்கோவன், செந்தில், யுவராஜ், மோகன், தட்சிணாமூர்த்தி, மோகன், சுரேஷ், தங்கமுத்து, ரவிக்குமார், சுந்தரமூர்த்தி, மதியழகன், உள்ளிட்ட அரசு அதிகாரிகள்,கழக நிர்வாகிகள், பொதுநல சங்க நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனையில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவள்ளூர், அக்.8-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் அவசர செயற்குழு கூட்டம் இன்று (08.10.2024 - செவ்வாய்கிழமை) காலை 11.00 மணியளவில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனையில் கவரைப்பேட்டை லட்சுமி திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது. கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் கி.வே. ஆனந்தகுமார் வரவேற்புரையாற்றுகிறார்.



மாவட்ட நிர்வாகிகள் இஏபி.சிவாஜி, ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ் முன்னிலை வகிக்கின்றனர். மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே. ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ. அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், பி. வெங்கடாசலபதி, கே.சுப்பிரமணி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் பங்கேற்கின்றனர்.

கூட்டத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ள ஆய்வுக் கூட்டத்திற்கு 09.10.2024 புதன்கிழமை வருகை தரவுள்ள துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து

இவ்வாறு டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




எழும்பூர் தொகுதி, மண்டலம் 8, வார்டு எண்.108, ஷெனாய் நகர், சுப்பராயன் தெருவில், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், 1.25 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடத்திற்கு கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அடிக்கல் நாட்டினார். இதில் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.